ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




| வேணு : 11 | ஜூன்– 2006 | கானம் : 11 |
|---|---|---|


www.madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் விஜயம்

















இடம் : மதுரை

தேதி : 25.05.2006 முதல் 31.05.2006 வரை

ஸ்ரீ ஹரி:





துவக்க விழா - ஸ்ரீ சாந்தீபனி வேதாந்த பாடசாலை,
இடம் : ஆலப்பாக்கம், சென்னை, தேதி : 30.04.2006









ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் ட்ரஸ்ட் சார்பில்
ஸ்ரீ ப்ரேமிகவரதன் மருத்துவ முகாம் சிறப்பு நிகழ்ச்சிகள்
இயற்கை மருத்துவ விழிப்புணர்வு சிறப்புமுகாம்
இடம் : மதுராபுரி, மஹாரண்யம்
தேதி : 30.04.2006

# மதுரமுரளி


Rs. 5/-

Registered as Newspaper in India R. No. 62828 / 95

Regd. No. TN / CC (S) DN / 119 / 06-08

Licensed to Post without prepayment WPP NO.TN / CC (S) DN / 51 / 06-08

வேணு : 11 | ஜூன் – 2006 | கானம் : 11

## ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை

இடம் : மதுரை


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar. Website : www.madhuramurali.org;

e-mail : contact@madhuramurali.org ; publications@madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு : 11 ஜூன் 2006 கானம் : 11

## பொருளடக்கம்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | ... | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 126 | ... | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | ... | 5 |
| 4. | மாதம் ஒரு புத்தகம் | ... | 7 |
| 5. | வேதம் போட்ட புதிர் | ... | 9 |
| 6. | காரணத்தை அறிந்து மொட்டை போடுவோமா? | ... | 13 |
| 7. | ஸ்ரீ சங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள் - 13 | ... | 15 |
| 8. | பாலகர்களுக்கு ஒரு கதை - 101 | ... | 21 |
| 9. | ருக்மிணியின் பிரார்த்தனை | ... | 26 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 126 | ... | 28 |
| 11. | செய்திகள் | ... | 31 |

*ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।*
*ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥*

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

## டோலோத்ஸவ கீர்த்தனங்கள் - 2

ராகம் : ஆனந்தபைரவி தாளம் : ஆதி

**பல்லவி**

*புவனஸுந்தர ஏஹி*
*புண்யஸ்லோக ஏஹி*

*ரவிசந்த்ரலோசன ஏஹி*
*ராதிகாப்ரிய ஏஹி*

*யமுனாவிலோல ஏஹி*
*யாதவகுலரத்ன ஏஹி*

*மந்தஹஸனமுக ஏஹி*
*முரளீதர ஏஹி (புவன ஸுந்தர)*

---

**அறிவிப்பு**

ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளாசியுடன்

21-5-2006 முதல் 27-5-2006 வரை (ஏழு நாட்களுக்கு) அகண்ட ''ஹரே ராம...'' நாம சங்கீர்த்தனம் முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடைப்பெற்றது. நாமசங்கீர்த்தன சத்சங்க நிகழ்ச்சிகளின் விவரங்கள் தொகுக்கப்பட்டு, ஜூலை 2006 மதுரமுரளி இதழ் நாம சிறப்பிதழாக வர இருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆசிரியர்**

## 126

இறைபணியாற்றுதல் என்பதைப் பற்றி ஸ்ரீ ஸ்வாமிஜி, சமீபத்தில் ஒரு இடத்தில் பேசியது, மிகவும் சுவையாக இருந்ததால், அதை இங்கு எழுதலாம் என்றிருக்கின்றேன்.

“நாயன்மார்கள் அறுபத்துமூவர். ஆனால், அதில் நால்வரைத்தான் மிகவும் முக்கியமாகக் கொண்டாடுகின்றோம். அதற்கு, பல்வேறு காரணங்கள் இருந்தாலும், மேலும் ஒரு காரணமும் இருக்கின்றது. இறைப்பணி என்பது என்ன? அவற்றை நாம் எப்படி ஆற்ற வேண்டும்? என்பதற்கு இந்த நான்கு நாயன்மார்களும் உதாரணமான மஹாத்மாக்களாக இருக்கின்றார்கள் என்பதே அது.

இறைப்பணியில் மிகவும் முக்கியமானது, இறைவன் வசிக்கக்கூடிய ஆலயங்களைப் பழுதுபார்த்து, திருப்பணி செய்யவேண்டியது என்பதை மாணிக்கவாசகர், அரசர் குதிரை வாங்குவதற்கு கொடுத்த பணத்தை வைத்து ஆவுடையார் கோவிலை திருப்பணி செய்ததன் மூலம் நமக்குக் காட்டினார்.

அப்படித் திருப்பணி செய்யப்பட்ட ஆலயங்களை உழவாரப் பணிசெய்து, மீண்டும் சிதலமடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நமது கடமை என்பதை நாவுக்கரசர் எப்பொழுதும் உழவாரப் பணிசெய்து நமக்கு உணர்த்தினார். துர்மதங்களைக் கண்டித்து, வைதீகமான மதத்தை ஸ்தாபித்தலும், இறைப்பணியின் ஒரு முக்கியமான அங்கம் என்பதை சம்பந்தர், சமண மதத்தைச் சேர்ந்தவர்களை வாதில் வென்று, சைவ மதத்தை ஸ்தாபித்து நமக்கு உணர்த்தினார்.

பக்தன் எப்பொழுதும் அழுமூஞ்சியாக இல்லாமல் எப்பொழுதும் மகிழ்ச்சியுடனும் சந்தோஷத்துடனும் இருந்துகொண்டே இறைப்பணியும் அடியார்களுடைய பணியையும் செய்யவேண்டும் என்பதை நமக்கு சுந்தரர் உணர்த்தினார்.

இறைப்பணி செய்பவர்கள், தமக்கு என்ன கடமை என்பதை இந்த நால்வர்களுடைய வரலாற்றிலிருந்து தெரிந்துகொள்ளலாம்'' என்றார்கள்.

**(தொடரும்)**

**– ஜயந்தி ஜானகிராமன்**


ஸ்ரீ ஹரி:

## தங்கள் கவனத்திற்கு

**ஸ்ரீ ஸ்வாமிஜியின் நூல்கள் :**

1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரைகள்
2. ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil : Cassettes, Audio CDs, VCDs**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அமுத உரைகள் | Cassettes, VCDs |
| 2. பகவான் ரமணரின் அக்ஷரமணமாலை | Cassettes, Audio CDs |
| 3. பகவான் ரமணரின் உபதேச உந்தியார் | Cassettes, Audio CDs |
| 4. Greatness of Bhagavan Ramana | Cassettes, Audio CD |
| 5. நாம மஹிமை | Audio CD |

**கீர்த்தனங்கள் :**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனங்கள் | Cassettes, Audio CDs |
| 2. மஹாமந்திரம்-அகண்ட கீர்த்தனம் | Cassette, Audio CD |

**கிடைக்குமிடம் :**

**CHAITANYA MAHAPRABHU NAMABHIKSHA KENDRA,**
*Admin. Office :* New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar,
Chennai - 600 083 Phone : 044-24895875
For queries regarding, Madhuramurali, Books, Audio tapes & CDs
kindly send e-mail to "publications@madhuramurali.org"

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : உலகத்தில், உழைக்காமல் சாதகர்கள் சாப்பிடலாமா?*

பதில் : நம் வீட்டில், யாரையாவது வேலைக்கு வைத்தால், மாலையில் அந்த நபர், நம்மிடம் அவர் தான் செய்த வேலைகளைப் பட்டியலிட்டுக் கூறுகின்றார். அதற்கான கூலியை நாம் தருகின்றோம். அதுபோல், ஒரு சாதகன், இரவு படுக்கப் போகும்முன், தான், அன்றையப் பொழுதை எவ்வளவு நேரம் ஜபம், தியானம், இறைச்சிந்தனையில் கழித்தோம் என்பதற்கான கணக்கை ஒப்புவிக்கவேண்டும்.

*கேள்வி : பட்டம், பதவி, பணம் போன்ற உலக சுகங்களில் எப்படி விரக்தியை வரவழைத்துக் கொள்வது?*

பதில் : காற்று அடிக்கும்பொழுது, தூசுகள் மேலே கிளம்பும். சில தூசுகள், சமயத்தில் சூரிய கிரணங்கள் படுவதால் பல வர்ணங்களில் ஜொலிக்கும். உண்மையில், எல்லாம் ஒரே தூசுதான். எல்லாம் மாயை என்பதில் திடமாய் இருந்தால் விரக்தி தானாக வரும்.

*கேள்வி : பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் மோக்ஷத்தை தரக்கூடியவர் என்றும், காம்யமான உலக சுகங்கள் வேண்டின் அதற்கான தெய்வங்களுக்கு உரிய மந்திரங்களை ஜபிக்க வேண்டும் என்கின்றார்களே?*

பதில் : மனிதர்களுக்கு மிகவும் அத்யாவசியமானது அன்னம். எப்பொழுது எடுத்தாலும், அள்ள அள்ளக் குறையாமல் அன்னம் வரும் அக்ஷயப் பாத்திரத்தை பகவான் ஸ்ரீ கிருஷ்ணன், பஞ்ச பாண்டவர்கள் வனவாஸம் போகும்பொழுது கொடுத்தனுப்பினான். அடுத்தது மனிதனுக்கு வேண்டியது, மானத்தை மறைக்க உடை. திரௌபதிக்கு இழுக்க இழுக்கக் குறையாமல் அக்ஷயமான உடையை அளித்தான். அடுத்ததாக, இருப்பதற்கு இடம். பாண்டவர்களுக்கு, அவர்களுக்கு உரிய ராஜ்யத்தை பெற்றுக் கொடுத்தான். அடுத்தது ஐச்வர்யம். குசேலருக்கு அக்ஷயமான ஐச்வர்யத்தைக் கொடுத்தான்.

எப்பொழுதும் ஸ்ரீ க்ருஷ்ண சரணங்களையே தியானித்துக் கொண்டிருந்த அம்பரீஷன் மீது துர்வாசர், துர்மந்திரத்தை ஏவியபொழுது, பகவானின் சுதர்சன சக்கரமே அவனை ரக்ஷித்தது. காளியன்மேல் நடனமாடும் ஸ்ரீ க்ருஷ்ணனை வர்ணிக்கும் பொழுது, ஸ்ரீமத் பாகவதம், ''அகிலகலாதி குரு'' என்கிறது. ஸகல கலைகளுக்கும் குருவும் அவனே. குப்ஜையின் ரோகத்தைப் போக்கி, அக்ஷயமான சௌந்தர்யத்தை கொடுத்தான். வித்யையிலேயே உயர்ந்த வித்யையான ஆத்ம வித்தையை அர்ஜுனனுக்கு உபதேசம் செய்தான். இப்படியிருக்க, உலக சுகங்களுக்காக வேறு தெய்வத்தை ஆச்ரயிக்க வேண்டிய அவசியம் என்ன இருக்கும்? நீங்கள் உபாசிக்கும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணனே எல்லாவிதமான நன்மைகளையும் கொடுப்பான்.

*கேள்வி : இந்த உலகம் பொய்யானது, ப்ரும்மம் மட்டுமே உண்மையானது என்கின்றீர்கள். அதை எப்படி அனுபவத்தில் கொண்டு வருவது?*

பதில் : இந்த உலகம் பொய் என்பதை மனதில் நன்றாக இருத்திக் கொண்டால், இந்த மனம், உலகத்துடன் ஓடுவது பெருமளவில் அடங்கும். நம்முடைய குரு எந்த மந்திரத்தை நமக்கு உபதேசம் செய்தாரோ அது மட்டுமே சத்தியம், அதைத்தவிர மற்ற எதுவும் உண்மையல்ல என்று த்ருடமாக இருந்தால், தானே அந்த ப்ரும்மானுபதி அனுபவத்தில் வரும்.

**அறிவிப்பு**

மதுரமுரளி இதழில் விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன.

**கட்டண விபரம்** (5 வரிகள் / 40 வார்த்தைகள்)

¼ Page Size Rs. 2000/-

விளம்பரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :
''மதுரமுரளி'', குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்,
Admin. Office : New No. 51, Old No. 24, 7th Avenue,
Ashok Nagar, Chennai - 600 083 Phone : 044-24895875

# மாதம் ஒரு புத்தகம்

நம் ஸ்வாமிஜி அவர்கள், தமது உபன்யாசங்களில், ''பகவான் பூர்ண சுதந்திரன்; அதாவது, முற்றிலும் சுதந்திரமானவன். யாருக்கும், எதற்கும், எந்த நியதிக்கும் கட்டுப்பட்டவன் அல்லன். ஆனால், அப்பேர்பட்ட பகவான் ஸ்ரீமத்பாகவதத்தில் சொல்லும் பொழுது, 'உலகத்தில் எல்லோரும் என்னை சுதந்திரன் என்று நினைக்கின்றார்கள். ஆனால், அது உண்மையன்று. ''அஹம் பக்த பராதீன:'' நான் எனது பக்தர்களின் அன்பிற்கு கட்டுப்பட்டவன்' என்று கூறுகின்றான். பக்தர்கள்பால் பகவானின் கருணையை என்னவென்று சொல்வது? அண்ட சராசரங்களை தனது சிறிய வாயினுள் அடக்கிக் காண்பித்த அதே கண்ணன், யசோதாமாவின் அன்பிற்கு அடிமையாகி, ஒரு உரலில் கட்டுண்டானே!'' என்று பக்தர்கள் உருக்கமாக சொல்வார்கள்.

பக்தர்களின் அன்பிற்கு கட்டுப்படும் பகவானின் எல்லையற்ற கருணையை சித்தரிக்கும் ஒரு சம்பவத்தை, அண்மையில் ஒரு நூலில் படிக்க நேர்ந்தது. அந்த நூலின் பெயர், ''உண்மையுடன் ஒரு வாழ்வு''. திருவண்ணாமலை, பகவான் யோகிராம்சுரத்குமார் அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய அந்த உயிர்துடிப்புள்ள ஓவியத்தை வரைந்தவர் பகவானின் நெருங்கிய பக்தரான பெங்களூர் திரு. S.P. ஜெனார்த்தனன் அவர்கள்.

பகவான் யோகிராம்சுரத்குமார் அவர்கள், திருவண்ணாமலை சன்னதித் தெரு இல்லத்தில் வசித்துவந்த காலம் அது. ஓரிரவு, படுத்து இளைப்பாறிக்கொண்டிருந்த யோகியார், திடீரென்று, ஏதோ மிக முக்கியமான ஒன்றினை மறந்துவிட்டவர்போல் எழுந்தார். நூலாசிரியரிடம், ''வெளியே போய் அலுமினிய பாத்திரத்தை எடுத்து வா!'' என்று பணித்தார். ''இரண்டு நாட்களுக்கு முன்னால், திலகவதி வந்திருக்கும்போது இந்த பிச்சைக்காரனுக்கு உணவு எடுத்து வந்தாள். அவள் அன்புடன் கொண்டுவந்த அந்த உணவை உண்ணாவிட்டால் நன்றாக இருக்காது'' என்றார். அங்கிருந்த மண் பானை அருகே பாத்திரத்தை வைக்கச் சொல்லிவிட்டு, ''மிகவும் வாடை அடிக்கும். நீ தள்ளிப் போய்விடு!'' என்று கூறிகொண்டே மண்பானையைத் திறந்தார். குழம்பு, காய்கறி எல்லாம் நுரை தள்ளி

ஒரு அங்குலம் கனத்திற்கு ஆடை கட்டி நின்றிருந்தது. மண் பானையை கவிழ்க்கவும், அவையெல்லாம் அலுமினிய பாத்திரத்தில் விழ, சாதம் மட்டும் பானையில் தங்கியது. பகவான் தனது பக்தையின் அன்பிற்கு அடிபணிந்து அமிர்தம்போல் அதை ருசித்து, ரசித்து உண்டார். இதைப் படிக்கும்போதே நமக்கு மேனி சிலிர்க்கின்றது. **– ஆ. பாக்யநாதன்**

---

ஸ்ரீ ஹரி:

உலக அமைதி மற்றும் நன்மைக்காகவும் மழை வேண்டியும் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்களின் ஆலோசனையின்படி அவரது அருளாசியுடன், சென்ற ஆண்டுகளில் நடைபெற்றதைப் போலவே இந்த ஆண்டும் தொடர்ந்து 48 நாட்கள் **"யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் யோகி ராம்சுரத்குமார் ஜெய குருராயா"** என்னும் ஒரே நாமாவை அகண்டமாக நாம சங்கீர்த்தனம் 30-04-2006 ஞாயிற்றுக் கிழமை முதல் 16-06-2006 வெள்ளிக்கிழமை வரை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை சென்னை மாநகரின் பல்வேறு இடங்களில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைவரும் நாம சங்கீர்த்தனத்தில் கலந்து கொண்டு குருவருளுக்கும், இறையருளுக்கும் பாத்திரமாகும்படி கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் விபரங்களுக்கு : செல் : 9444415142

---

ஸ்ரீ ஹரி:

அன்பார்ந்த மதுரமுரளி வாசகர்களே!

நமது மிஷன் சார்பில் வெளிவரும் மதுரமுரளி தெய்வீக மாத பத்திரிகைக்கு தாங்கள் அளித்து வரும் ஆதரவுக்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றி. நம் மதுரமுரளி, இதழுக்கு இதழ் பொலிவு பெற்று வெற்றிகரமாக 11வது ஆண்டாக வெளிவருவது அனைவரும் அறிந்ததே. இந்த இதழ் தொடர்ந்து வெளிவர, வாசக அன்பர்களாகிய நீங்கள் இதன் வளர்ச்சிக்காக ஆற்றவேண்டிய சிறிய தொண்டு ஒன்று உண்டு. ஆம்! அது, நீங்கள், உங்களின் சந்தாவை காலத்தே தவறாது புதுப்பித்துக்கொள்வதும், மேலும், பல புதிய சந்தாதாரர்களை சேர்க்கும் பணியில் ஈடுபடுவது தான். இவ்விரண்டுமே மதுரமுரளி தொடர்ந்து பீடுநடை போட உதவும்.

தெய்வீகப் பணி தொடர்ந்து நடைபெற உங்களின் ஆதரவை எதிர்நோக்கும்.

- **ஆசிரியர், மதுரமுரளி.**

# வேதம் போட்ட புதிர்

**– ப்ரஹ்மஸ்ரீ V. ஸ்வாமிநாத ஆத்ரேயர்**

வேதத்தாய், தன் குழந்தைகளுக்குச் சில இடங்களில் புதிர்கள் போடுவாள். அவர்கள், விடை தெரியாமல் திகைக்கும்பொழுது, அவளே புதிரை அவிழ்த்தும்விடுவாள்.

*அபாணி பாதோ ஜவநோ க்ரஹீதா*

''காலில்லாத அவன் வேகமாக ஓடுவான். கையில்லாத அவன் கெட்டியாகப் பிடித்துக்கொள்வான். அவன் யார்?'' என்று கேட்பாள். நாம் தெரியாமல் விழிக்கும்பொழுது, ''அவன்தான் எல்லாம்வல்ல இறைவன்'' என்று விளக்குவாள்.

ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமிகள், ஒரு சமயம், தம்மைத் தரிசனம் செய்ய வந்த 5-6 விஞ்ஞானிகளைத் தமதருகில் அமர்த்தி வைத்துக் கொண்டு ஸரஸமாக, ஒரு புதிரை, வேதத்திலிருந்து அவிழ்த்து விட்டார்கள்.

அது மஹாஸ்வாமிகளுடைய இயல்பான, மிகத் தெளிவான பேச்சு நடையிலேயே இங்கே தரப்படுகிறது.

''சுக்ல யஜுர்வேதத்தில் பிரஹ்மதத்துவத்தை அனுபவபூர்வமாக உணர்ந்த ஞானிகள், தத்துவவிசாரம் பண்ணுகிறார்கள், ஒரு உபநிஷதத்தில். அதன் ஆரம்பத்தில் மங்களமாக இப்படி ஒரு சாந்தி பாடம்.

***பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே***
***பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவா வஸிஷ்யதே***

***ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:***

இந்தச் சாந்தி பாடத்திற்கு மேலெழுந்தவாரியாக இப்படி அர்த்தம் சொல்லலாம்.

''அதோ கிடக்கிறதே அது பூர்ணம். இதோ தெரிகிறதே இது பூர்ணம். அந்தப் பூர்ணத்திலிருந்து இந்தப் பூர்ணம் உண்டாகிறது. அந்தப் பூர்ணத்திலிருந்து இந்தப் பூர்ணத்தை எடுத்துவிட்டால் மீதமாவது பூர்ணம்!''.

இப்படி ஒரு புதிர் போடுகிறது வேதம். புதிர் என்றால் என்ன? ஒருவர், தமக்குத் தெரிந்த விஷயத்தைப் பூடகமாகச் சொல்கிறார். கேட்டுக்கொண்டிருப்பவனுக்குப் புரியவில்லை. சொன்னவர் தவறாகச் சொல்லமாட்டார். ஆனால், கேட்பவனுக்கு அந்தத் தெளிவான சேதி புரியவில்லை. இதுதானே புதிர்?

பூர்ணம் என்னும் சப்தத்திற்கு வேதத்தில் இப்படித்தான் அர்த்தம் கொள்வார்கள். நமக்குத் தெரிந்தவை, தெரியாதவை எல்லாம் அதற்குள் அடக்கம். அதற்கு வெளியே ஒன்றும் கிடையாது. அப்படி ஏதாவது இருந்தால், அது பூர்ணமாகாது. இப்போது பார்க்கலாம்.

அங்கே ஒரு பூர்ணம். இங்கே ஒரு பூர்ணம் என்கிறது சாந்தி பாடம். ஆரம்பத்தில் தலையில் குட்டிக்கொள்வதற்குப் பதிலாகக் கண்களைக் குட்டிக்கொள்கிறது.

இரண்டு பூர்ணமா? இருக்கவே முடியாதே! பூர்ணம் ஒன்று தானே! அடுத்தாற்போல் வேதம் சொல்கிறது. ''பூர்ணத்தில் இருந்து பூர்ணம் கிளம்புகிறது''. மஹாஆகாசம் உள்பட எல்லாமே பூர்ணம் ஆகிவிட்டபொழுது, வெளியில் ஒன்று இருந்தால்தானே, ஒன்றிலிருந்து வேறு ஒன்று தனியாக வெளிப்பட முடியும். பூர்ணத்திலிருந்து பூர்ணம் எப்படிக் கிளம்ப முடியும்? அப்போது, முதலில் சொன்ன பூர்ணம் அழிந்துவிடுகிறதா? அழிந்துவிடுமானால், அது பூர்ணம் இல்லையே?

அடுத்த வாக்கியம் பார்க்கலாம். பூர்ணத்தினுடைய பூர்ணத் தன்மையை எடுத்துவிட்டால், என்ன ஆகும்? ஒரே சூன்யம் ஆகும் இல்லையா? ஆனால், வேதம் சொல்கிறது, ''பூர்ணம் முழுவதுமாக மிச்சப்படுகிறது'' என்று. இஃது எப்படி?

இப்படிப் பூர்ணமான, கொஞ்சம்கூட இடைவெளி இல்லாத ஒரு புதிர் போடுகிறது வேதம். ''பூர்ணத்தில் இருந்து பூர்ணத்தை எடுத்துவிட்டால்'' என்று வேதம் சொல்கிறதே! அந்தப் பூர்ணத்தையும், இந்தப் பூர்ணத்தையும் சேர்த்துவிட்டால் ஒன்றாகிவிடுமே! அப்போது அது பூர்ண பூர்ணமாகிவிடுமே. அப்படிச் சொல்லாமல், ''எடுத்து விட்டால்'' என்று சொல்கிறதே வேதம்? இதுதான் புதிர்!

கெட்டிக்காரன் புதிர் போட்டால் அது மிகவும் தெளிவாக இருக்கிறதுபோலத் தோன்றும். ஆனால், சொல்கிறது ஒன்றுக்கொன்று பொருந்தாது. நாம் விழிப்போம். அதை அவனே அவிழ்த்து விடும்பொழுது, ''ப்ப்பூ! இவ்வளவுதானா!'' என்று சிரிப்போம். அதுபோல், வேதத்தாயும் புதிரையும் போட்டு, தானே அவிழ்த்தும் விட்டு, குழந்தைகளைச் சிரிக்க வைக்கிறாள்.

வேதாந்திகள் திருப்பித்திருப்பி ஒரு உபமானத்தைச் சொல்லி வேதாந்த விஷயத்தைப் புரிய வைப்பார்கள். நீங்களும் பல தடவை கேட்டு இருப்பீர்கள். அதையே நானும் சொல்லிப் பார்க்கிறேன். (காஞ்சி ஸ்ரீ மஹாஸ்வாமிகள்).

இருட்டின பிறகு ஒருவன் தெருவோடு போகிறான். போகிற வழியில் சற்றுத் தூரத்தில் ஒன்று சுருட்டிக்கொண்டு தலையை நீட்டிக்கொண்டு கிடக்கிறது. ''பாம்பு'' என்று உளறிக்கொண்டு பயந்துவிட்டான். உடனே வீட்டுக்குத் திரும்பிவந்து டார்ச்சை எடுத்துவந்து அதன்மீது டார்ச் வெளிச்சத்தைப் பாய்ச்சுகிறான். ''பாம்பு இல்லை போலிருக்கிறதே!'' தைரியமாகக் கிட்டே நெருங்குகிறான். ''சீ! வெறும் தாம்புக்கயிற்றுச் சுருள். மேலே அதன் முடிச்சு''. பயம் போய்விடுகிறது. தன் அசட்டுத்தனத்தை நினைத்துச் சிரித்துக்கொண்டே போய்விடுகிறான். இப்படித்தானே அநுபவம் கிடைக்கிறது! இந்த அநுபவத்தை உபமானமாக வைத்துக்கொண்டு வேதாந்திகள் நம்முடைய புதிரை அவிழ்த்துவிடுகிறார்கள். அஃது எப்படி என்று பார்ப்போம்.

இன்னதென்று புரியாமல் தெருவில் கிடந்த பொருளைப் பாம்பு என்று தீர்மானித்துவிட்டானே. அதனால்தானே பயந்தான்? அந்த நேரத்திலே அது பூர்ணமான ஸத்யம்.

ஆனால், உண்மை என்ன? கிடந்தது வேறு. இவன் நினைத்தது வேறு. அதுவும் பூர்ணமானது. இதுவும் பூர்ணமானது. (சாந்தி பாடத்தின் முதல் வாக்கியம் சரியாகி விட்டதா?)

அது, கீழே கிடந்ததால்தான் அதைப் பாம்பு என்று இவன் நினைத்தான். கீழே கிடந்ததிலிருந்து பாம்பு என்னும் நினைப்பு வந்தது. ஆகவே, இரண்டாவது வாக்கியமும் சரியாகிவிட்டது. வெளிச்சத்தைக் கொண்டுவந்து பார்த்தபொழுது, கீழே கிடந்தது, தாம்புக்கயிறு

என்று தெரிந்தவுடன், அது பாம்பு என்ற பயத்தை எடுத்து எறிந்துவிட்டான்.

பூர்ணமான தாம்புக் கயிற்றின் உண்மையிலிருந்து பூரணமான பாம்பு என்னும் தோற்றத்தை எடுத்து எறிந்துவிட்டால் மீதம் என்ன? தாம்புக்கயிறுதான். (மூன்றாவது வாக்கியம் சரி ஆகிவிட்டது). ஒரு வஸ்துவின் உண்மை தெரிந்தால் தோற்றம், தவறான எண்ணம் மறைந்துவிடும். அதற்கு முன் இரண்டுமே அவனுக்கு ஸத்யமாக இருந்தன. இந்த உபமானத்தைக் கொண்டு ப்ரஹ்மஞானத்தை வேதாந்தம் நிரூபிக்கிறது. நாம் காண்கிறோமே, இந்தப் பிரபஞ்சம், அதிலிருந்து நமக்கு ஏற்படுகின்ற சுக, துக்க அனுபவங்கள் எல்லாமே ஸத்யம் தான். பூர்ணம்தான். எதுவரை?

ஆனால், அத்தனையும் மாயை, இருட்டு! நம் கண்ணை மறைக்கிறது. பாம்பைக் காட்டினதுபோல், நமது அக்ஞானம் பிரபஞ்சத்தைக் காட்டுகிறது. இந்த அக்ஞானம் போகிறவரையில் இந்தத் தோற்றம் மறையாது!

நாம் டார்ச்சை வைத்துக்கொண்டு பாம்பு மாயையை விரட்டியது போல, பகவான் நாமம் சொல்லி, பகவானை உபாஸித்து, பகவன் நாமம் சொல்லச்சொல்ல, நமது அக்ஞானம் விலகுகிறது. வெளிச்சம் தெரிகிறது. அப்போது நமக்குத் தோற்றமாக நிற்கின்ற பிரபஞ்சம், அதன் சுக, துக்கங்கள் எல்லாம் மாயைதான் என்பது புரிகிறது. அதனால் ஏற்பட்ட பயம், சுக, துக்கங்கள் எல்லாம் மறைகின்றன. நமது பக்தி சுயநலமோ, வாழ்க்கைக்கு வேண்டிய கர்மங்களோ இல்லாமல் அவனுடைய திருவடி தரிசனமே பரம பாக்கியம் என்னும் ஏக்கத்தைத் தருகிறது. இந்த ஏக்கம் வந்துவிட்டால் நமக்குப் பரமஞானத்தை அருளுகிறான் பகவான். பின் என்ன? ஆனந்த அனுபவமே எஞ்சி நிற்கிறது.

இதுதான் ஸகல வேதங்களுடையவும், உபநிஷத்துக்களுடையயவும், நாயன்மார்கள் பதிகங்களிலும், ஆழ்வார்கள் பாசுரங்களிலும், இராமாயணம், பாகவதம் முதலிய கிரந்தங்களிலும் விரிவாக விளக்கப்படுகின்ற தத்துவம்.

இதைச் சொல்லத்தான் இந்தப் பீடம் இருக்கிறது. உங்களுக்கு வேறு என்ன சொல்லலாம்?'' என்று புன்முறுவல் பூத்தார்கள் ஸ்ரீ மஹாஸ்வாமிகள்.

# காரணத்தை அறிந்து மொட்டை போடுவோமா?

— ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி

'மயிர்நீப்பின் வாழாக் கவரிமான்' என்று கவரிமானுடைய பெருமை, திருவள்ளுவரால் திருக்குறளில் பேசப்படுகின்றது. அதாவது, இந்த மானினுடைய உடலிலிருந்து ஒரு மயிர் கீழே விழுந்தாலும், உடனே இந்த மான் உயிரை விட்டுவிடுமாம். கவிஞர்கள் பலர், இந்த மானைப் பற்றிப் பேசியிருக்கின்றார்கள். ஆமாம், இந்த மயிருக்கும் உயிருக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? இருக்கும் போலத்தான் தோன்றுகிறது. கொஞ்சம் விரிவாகப் பார்ப்போமா?

அஸ்வத்தாமா, பாண்டவர் வம்சத்தை பூண்டோடு அழிப்பதாக சபதம் செய்து, அதற்காக மீண்டும் மீண்டும் முயற்சிக்கின்றான். ஒரு சமயம், திரௌபதி தூங்கிக்கொண்டிருக்கும்பொழுது, அவளுடைய குழந்தைகளை எல்லாம் அஸ்வத்தாமா கொன்றுவிடுகின்றான். இதை அறிந்தவுடன் அர்ஜுனன், அஸ்வத்தாமாவை கொல்வதாக அவசரமாக சபதம் பூண்டான். ஆனால், அஸ்வத்தாமா தங்களுடைய குருவினுடைய புத்திரனாக இருப்பதால், அவனைக் கொல்ல வேண்டாம் என்று திரௌபதி மன்றாடிக் கேட்டுக் கொள்கின்றாள். ''அவனைக் கொல்வதாக சபதம் செய்து விட்டோமே! சபதத்தையும் மீறக்கூடாது அல்லவா?'' என்று அர்ஜுனன் தவிக்கின்றான். அப்பொழுதுதான், பகவான் ஸ்ரீ க்ருஷ்ணன், அர்ஜுனனைப் பார்த்து, ''அஸ்வத்தாமாவினுடைய தலையில் உள்ள மயிரை நீக்கி விடு. அது அவனுடைய உயிரை எடுத்ததற்குச் சமம்'' என்கின்றார். அதுபோலவே, அர்ஜுனனும் செய்தான்.

அந்தக் காலத்தில் கணவன் இறந்துவிட்டால், அந்தத் தீயிலேயே விழுந்து உயிரை விடுகின்ற 'உடன்கட்டை ஏறும் பழக்கம்' ஒன்று இருந்து வந்ததாக வரலாறு கூறுகிறது. அந்த சமூகக் கொடுமையை எதிர்த்து, திரு. ராஜாராம் மோகன்ராய் போன்ற எண்ணற்ற சமூக சீர்திருத்தவாதிகள் போராடினார்கள். அப்படித்

தீயில் விழுந்து உயிரை விடாதவர்கள், அதற்கு பதிலாக தங்கள் தலையில் உள்ள மயிரை எடுத்துக் கொள்ளும் பழக்கம் இருந்து வந்தது என்பதையும் சரித்திரத்தைப் படித்துத் தெரிந்துகொள்ளலாம்.

நமது மதத்தில் துறவு என்பது மறுபிறவி எடுப்பதற்குச் சமம். துறவுக்குப் பிறகு, துறவிக்கு புதுப்பெயர் போன்றவைகள் எல்லாம் சூட்டப்படுகின்றன. மறுபிறவி என்றால், உயிர் போனபிறகுதானே; அதனால் துறவியும் துறவு மேற்கொள்ளும்பொழுது, தலையை மழித்துக் கொள்கின்றனர்.

ஆமாம்...! நாம் ஏன் திருப்பதி, பழனி போன்ற தலங்களுக்குச் சென்று மொட்டைப் போட்டுக் கொள்கின்றோம் என்று இப்பொழுது புரிகின்றதா? அதாவது, அப்படிச் செய்வது நாம் நம்முடைய உயிரையே இறைவனுக்கு அர்ப்பணிப்பதற்குச் சமம். அதனால்தான் நாம் நம்முடைய வாழ்க்கையில் பெரிய கஷ்டங்கள் வரும்பொழுது இறைவனிடம் நாம் மொட்டை அடித்துக் கொள்வதாக வேண்டிக் கொள்கின்றோம்.

---

## அறிவிப்பு!

1995-ல் ஸ்தாபிக்கப்பட்டு, ஸ்ரீ சாந்தீபனி குருகுல ட்ரஸ்ட் வேதபாடசாலை இன்றளவும், மதுரபுரி வளாகத்திலும், சென்னையில் உள்ள ஆலப்பாக்கத்திலும் நடந்து வருகின்றது. நம்முடைய பாரததேசத்தின் ஜீவனாக இருக்கக்கூடிய வேதத்தைக் காப்பாற்றுவதில் எல்லோருடைய பங்கும் இருக்கவேண்டும் என்பது ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் விருப்பம். அதன்படி, ஒவ்வொருவரும், தங்கள் தங்கள் வீட்டிலுள்ள ஸ்வாமி படத்தின் முன்பாக ஒரு உண்டியல் வைத்து, அதன்மேல் ''**வேத நிதி**'' என்று எழுதி, தினமும் அதில் ஒரு ரூபாய் போட்டு வரவும். ஒவ்வொரு வருடமும், டிசம்பர் 31-ந் தேதி அதில் சேர்ந்த பணத்தை எடுத்து **ஸ்ரீ சாந்தீபனி குருகுல ட்ரஸ்ட் (Sri Sandeepani Gurukula Trust)** என்ற பெயருக்கு DD எடுத்து New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**- Trustees**

# ஸ்ரீ சங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள் - 13

- குடந்தை என். இராமசர்மா

तथा दुःखात्मकस्यात्मनो द्वैतप्रपञ्चोपशमे स्वस्थता ।
अद्वैत भावः प्रयोजनम् ।
द्वैतप्रपञ्चस्याविद्याकृतत्वाद्विद्यया तदुपशमः
स्यादिति ब्रह्मविद्याप्रकाशनाय अस्यारम्भः क्रियते ॥

*''ததா துக்காத்மகஸ்ய ஆத்மநோ த்வைத ப்ரபஞ்ச உபசமே ஸ்வஸ்த்ததா*
*அத்வைத **பா**வ: ப்ரயோஜநம் । த்வைத ப்ரபஞ்சஸ்ய அவித்யா க்ருதத்வாத் வித்யயா தது பஶம: ஸ்யாதிதி ப்ரஹ்ம வித்யா ப்ரகாசநாய அஸ்யாரம்ப: க்ரியதே ॥''*

ஜீவன் அவனது சொந்தமான உண்மை நிலையில், இன்பமே வடிவானவனாக இருக்கிறான். அக்ஞானம் எனும் கிருமி தாக்க, பிரபஞ்ச ஜ்வரத்திற்கு ஆளாகிறான். எல்லாம் இரண்டாகவே தெரிகிறது. வேறு வேறாகத் தெரிகிறது. துவைதப் பிரபஞ்சமாகிற மயக்கம் உண்டாகிறது. துக்கமே எக்காலமும் துணையாகிறது.

குருவானவர் நமது நாடியைப் பார்க்கிறார். ஜ்வரவேகம் அறிகிறார். வேதாந்த மருந்தை நாதாந்தத் தேனில் அருந்தத் தருகிறார். கர்மயோகத்தைப் பத்தியமாக விதிக்கிறார். உடனடி நிவாரணம் பெறுகிறான் ஜீவன். துவைத பிரபஞ்சத்தின் பொய்த்தோற்றம் மறைகிறது. அதிஷ்டான ஆத்மதத்துவம், அங்கிங்கெனாதபடி ஆனந்த பூர்த்தியாக அருளொடு மிளிர்வதை உணர்கிறான். 'இதுதானே சாஸ்திரங்களைக் கற்பதன் பயன்' என்கிறார் பகவத்பாதர்.

தன்னில் தானாகி, தானும் அதுவாகி, அதுவே எல்லாமாகி, எல்லாமும் ஒன்றாகி நிற்கும் ஒருமைத் தத்துவத்தில் அருமை பெற, இருமையின் கருமை நீங்கி ஒளிர ஆரம்பிக்கிறான்.

இதன் பொருட்டே கயிலைநாதன் சூலத்தை எறிந்துவிட்டுத் தண்டத்தையும், யானைத் தோலுக்குப் பதில் காஷாயத்தையும்,

கங்கைக்குப் பதில் கமண்டலுவையும் எடுத்துக்கொண்டு, கயிலையை விட்டுக் கீழே இறங்கி, ஸ்ரீ சங்கரராக வந்தார். சனகாதி முனிவர்களும் நான்கு சீடர்களாக வர, மோனம் துறந்து ஞானம் பகர வந்தார். ஞான வெளிச்சத்தில்தான் கொஞ்சம் நுழைந்து பார்ப்போமே!

உலகமுய்யவென்று அவதரித்த ஸ்ரீ சங்கரரின் கவிதாரஸத்தின் குறையா இனிமை கண்டோம். ப்ரேமரஸத்தின் கவர்ச்சி கண்டோம். மோனவெளியில் எழும் ஞானரஸத்தின் வீச்சு கண்டோம். நிறைவான வாழ்வு தரும் மறைவான இறை தத்துவத்தின் குணக் கறைபடியா தேவ வாழ்வில் ஞான மலராக மலர்ந்து, பக்தி மணம் பரப்பி, நாதயோகத் தென்றல் வீசும் ஆசார்யரின் நூல்கள் பல. ஒவ்வொன்றும் தனித்தன்மை வாய்ந்தவை. புகல் தேடிவரும் சாதகப் பறவைகளுக்கு அகல் விளக்காய் வழிகாட்டுபவை. அகலா ஒளியாக அருகே நின்று அக்ஞான இருள் அகற்றுபவை. இவற்றுள் 'யோகதாராவலீ' ஒன்று.

நாதானு ஸந்தான ரூபமான யோக வித்யை ஞானத் தாகமுடைய சாகர்களுக்கு உபதேசிக்கப்படுகிறது. ஹடயோகம், ராஜயோகம், த்யான யோகம், நாத யோகம் போன்ற யோகங்களின் ரஸங்களை ரஸமாகத் தருகிறார். இந்நூலில், விசார ரஸத்தில் முடிக்கிறார். பேரானந்தப் பெருவாழ்வு பெற வேண்டுமெனில் முக்தி நிலை வேண்டும். முக்தி நிலை கூட தத்துவ நிஷ்டை வேண்டும். தத்துவ நிஷ்டை கூட த்யானம் செய்ய வேண்டும். த்யானம் திடமாக அமைய யோகப் பயிற்சி இன்றியமையாதது. இதுவொரு முறையான உபாஸநா மார்க்கம்.

ஸர்வேச்வரனான ஸதாசிவனால் சொல்லப்பட்ட சித்த லயத்திற்கான முறைகள், அதாவது உபாஸநா மார்க்கங்கள், ஒன்றே கால் லக்ஷம் உள்ளன.

सदाशिवोक्तानिसपादलक्षलयावधनानि वसन्ति लोके ।
नादानुसन्धान समाधिमेकं मन्यामहे मान्यतमं लयानाम् ॥

*ஸதாசிவோக்தாநி ஸபாத லக்ஷ*
*லயாவதநாநி வஸந்தி லோகே ।*
*நாதாநுஸந்தாந ஸமாதிமேகம்*
*மந்யாமஹே மாந்யதமம் லயாநாம் ॥*

இவற்றுள் நாதாநுஸந்தானத்தின் மூலம் பெறப்படும் சித்த லயமாகிற சமாதி நிலை ஒன்றையே எல்லாவற்றிலும் சிறந்ததாகக் கருதுகிறோம் என்கிறார். நாதத்தைச் சிந்தித்தல் நாதாநுஸந்தானம். எந்த நாதத்தைச் சிந்தித்தல்? எப்போதும் இதயவெளியில் ரீங்காரம் செய்துகொண்டிருக்கும் ஓங்கார நாதத்தைச் சிந்தித்தல். அதாவது, அதைக் கேட்க, உணரப் பழகுதல். மனதை அவ்வொலியில் நிலைப்படுத்துதல். 'யத் **பா**வம் தத்பவதி' என்று எதைத் தொடர்ந்து நினைத்துக்கொண்டேயிருக்கிறோமோ அதுவாகவே நாம் ஆகிவிடுகிறோம்.

பிரணவ நாதத்தில் சித்தம் ஒடுங்கியது என்றால் சித்தம் நாதமயமாகிவிடும். இந்த நாதம் எட்டு கலைகளை உடையது. அகாரம், உகாரம், மகாரம், பிந்து, நாதம், கலை கலாதீதம், தத்பரம் என்றுள்ள எட்டு நிலைகளில், ஒவ்வொன்றிலும் தியானம் நிலைப்பட நிலைப்பட, அதைக் கடந்து அடுத்த நிலையை எட்டி விடலாம். படிப்படியாகக் கடந்து 'தத்பரம்' என்ற எட்டாவது நிலையை எட்டும்போது சாதகன் பரமாக, எல்லாம் கடந்திருக்கும், 'தத்' என்ற பதத்தால் சுட்டப்படும் ஆத்ம தத்துவத்தோடு ஒன்றிப்பை அடைந்து விடுகிறான்.

மேலும், இந்நிலைகளைக் கடந்து செல்லும்போது நிகழும் மாற்றங்களும், உண்டாகும் இடையூறுகளும் பற்றிக் கூறுகிறார். நமது முயற்சியையும், அடைந்த நிலைகளையும் இனங்காட்டிக் கொடுக்கிறார். இவர் ஆதரவுடன் அணைத்துச் செல்லும் அழகே தனிதான். தந்தையின் பாசமும், குருவின் கனிவும், உபாத்யாயரின் கண்டிப்பும், நண்பனின் ஆலோசனையும் ஒருசேர இணைந்திருக்கும் இன்பரஸம் இவரது யோகரஸம்.

பகவத்பாதர் காட்டிக்கொடுக்கும் யோகநெறி பரமேச்வரன் பகர்ந்த நெறி. நாத, யோக, லய மார்க்கம். பயமற்ற ராஜ மார்க்கம். நேரடியாக ப்ரும்மத்தை ஸ்பர்சிக்க வைக்கும் தத்துவநெறி.

கல்லில் மறைந்திருக்கும் உருவத்தை வெளியே கொண்டுவர சிற்பி தேவை. நெஞ்சில் எப்போதும் ஒலித்துக்கொண்டிருக்கும் ப்ரும்ம வாசகமான ப்ரணவத்தைக் காட்டிக் கொடுக்க, குரு தேவை. ஞான குருவாக வரும் ஆச்சாரியர் காட்டிக் கொடுக்கும் அழகே தனி.

பரமான தத்துவமே, கீழுள்ள ஏழு நிலைகளிலும் வியாபிக்கிறது. இதனாலேயே சப்தத்தை 'ப்ரும்மம்' என்கிறோம். உலகும், உலக விவகாரங்களும் சப்தத்தில் ஒடுங்கும். சப்தங்கள் ப்ரணவத்தில் ஒடுங்கும். ப்ரணவம் நாதத்தில் ஒடுங்கும். நாதம், அதன் மூல வடிவில் ப்ரும்மமாகும்.

இந்த ஒலியைக் கேட்க என்ன செய்ய வேண்டும்? இதற்குப் பெயர் உண்டா?

நாசித்வாரங்கள் வழியே காற்றை உள்ளே இழுத்தல் பூரகம். சீராக வெளியே விடுதல் ரேசகம். இழுத்த காற்றை வெளியே விடாமல் நிலைப்படுத்துதல் கும்பகம். இம்மூன்றையும் முறையாகப் பயில வேண்டும். இதனால் உடலிலுள்ள எல்லா நாடிகளும் சுத்தமாகும். நாடிகள் சுத்தமாக சுத்தமாக மனம் உள்நோக்கித் திரும்பும். இதயவெளியில் ஸதா ஒலித்துக் கொண்டிருக்கும் ''அநாஹத நாதம்'' மனதிற்குக் கேட்க ஆரம்பிக்கும்.

सरेचपूरैरनिलस्य कुम्भैः सर्वासुनाडीषुविशोधितासु ।
अनाहताख्यो बहुभिः प्रकारैः अन्तः प्रवर्तेतसदानिनादः ॥

*ஸரேசபூரைரநிலஸ்யகும்பை :*
*ஸர்வாஸுநாடீஷு: விசோதிதாஸு ।*
*அநாஹதாக்யோ பஹுபி: ப்ரகாரை:*
*அந்த: ப்ரவர்த்தேத் ஸதாநிநாத: ॥*

''ந ஆஹத: நாத: அநாஹத: நாத:'' என்றபடி புறக் காரணங்கள் எதுவுமின்றி, தனக்குத்தானே காரணமாக எழும் நாதம் 'அநாஹதம்'! நமது நாவிலோ, கண்டத்திலோ, அல்லது இசைக் கருவிகளிலோ இரண்டின் சேர்க்கையின்றி ஒலி எழாது. இதனால் இவை ஆஹத சப்தங்கள்.

மூலாதாரம் துவங்கி தலையில் உள்ள ப்ரும்மரந்த்ரம் வரையில் செல்லும் நாடிக்கு ஸுஷும்நா (சுழுமுனை) என்று பெயர். இதில் ஆறு இடங்களில் அறுவகைச் சக்கரங்கள் உள்ளன. இதயத்திற்கு நேராகவுள்ள சக்கரத்திற்கு 'அநாஹத சக்ரம்' என்று பெயர். 'நாடிசுத்தி' முதலான சாதனங்களால் எழுப்பப்பட்ட குண்டலிநீ சக்தி

'அநாஹத சக்ரத்தை' அடையும்போது பிரணவாகாரமான நாதம் எழுகிறது. இதற்கு அநாஹதம் எனப் பெயர்.

உலகில் நாம் கேட்கும் எல்லா நாதங்களிலிருந்தும் வேறு பட்டது இந்நாதம். எல்லா நாதங்களுக்கும் மூலநாதம் இது. இது கேவலவித்யா சொரூபமானது, என்றும் இருப்பது. யோக சாதனையில் உணரப்படுவது. இது ப்ரும்ம கீதம். ஆன்ம நாதம், போத சப்தம், கோபியரை ஈர்த்த கண்ணன் குழலோசை போல் மெய்ஞானச் சுடரிடம் சாதகனை இழுத்துச் செல்வது இந்நாதமே.

இந்நிலை அடைய என்ன செய்ய வேண்டும்? சாதகன் குருவிடமிருந்து பீஜாக்ஷரங்களோடு கூட மந்திரத்தை உபதேசமாகப் பெற வேண்டும். நியமத்துடன் தொடர்ந்து ஜபம் செய்து வரவேண்டும். மூன்றரைக் கோடி முதல் ஐந்து கோடி எண்ணிக்கையைக் கடக்கும்போது ஸ்தூல சூட்சும சரீரங்கள் தூய்மை பெறும். மனம் உலக விஷயங்களை நினைக்கும் சக்தியினின்று கழன்று போகும்.

*''நிராலம்பம் மந: க்ருத்வா நகிஞ்சிதபி சிந்தயேத் ।''*

எண்ணங்களே எழாத நிலையை மனம் அடையும்போது தன் இருப்புக்குக் காரணமான காட்சி சொரூபத்துடன் லயமடைந்து விடுகிறது.

*''வ்ருத்தி ஹீநம் மந: க்ருத்வா பூர்ண ரூபம் ஸ்வயம் **ப**வேத்'' ॥*

முதலில் 'ஜபம்' எடுத்துக்கொள்ள முடியாதவர்கள் நாமதீக்ஷை பெறலாம். நாமம் மந்த்ர ஜபத்தில் கொண்டு விடும். ஜபம் தியானத்தில் சேர்க்கும். தியானம் முற்ற முற்ற உடலும் உள்ளமும் புடம் போடப்பட்ட தங்கம் போல் தூய்மையாகிறது. 'நாடி சுத்தி' போன்ற சுவாஸப் பயிற்சிகளும் தொடரும். பூரண தூய்மை நிலையில் கேட்கப்படும் நாதமே அநாஹதம். இது பூரண வஸ்துவின் பூரண நாதம்.

''ஸ்வாமி! நான் தியானத்தில் அமர்ந்தால் ஏதேதோ சப்தங்கள் என்னுள்ளே கேட்கின்றனவே'', என்றான் சீடன். தியான யோகத்தின் வளர்ச்சி நிலைக்கேற்றவாறு சப்தங்கள் மாறுபடும். இவற்றை வைத்து நம் வளர்ச்சி நிலையைக் கணக்கிடலாம் என்கிறார் பகவத் பாதர்.

சாதனையில் ஈடுபடுவதற்குமுன் உலகாயத சப்தங்களின் சந்தடியில் உள்ளே எழும் சப்தம் கேட்காமலிருந்தது. குருவின் மூலம் சுவாஸப் பயிற்சி, நாம ஜபம், மந்த்ர தீக்ஷை இவை பெற்றாகி விட்டது. தொடர்ந்து தொய்விலாத நம்பிக்கையோடு கூடிய சாதனை வளர வளர பலவகை சப்தங்களை உணர முடியும் என்கிறார்.

ஆரம்ப நிலையில், ‘அலை ஓசை’ போன்ற நாதம் கேட்கும். அடுத்து மேக கர்ஜனை. அடுத்து முரசின் முழக்கம். பிறகு நீரருவியின் ஒலி. தொடர்ந்து படிப்படியான நிலைகளில் சங்க நாதம், மத்தளத்தின் த்வனி, மணியின் நாதம், சதங்கை ஒலி, குழலோசை, வீணா நாதம், வண்டின் ரீங்கார நாதம் எனக் கேட்கும். இறுதியில் எல்லா நாதங்களுக்கும் ஆதார நாதமாயிருக்கும் பிரணவத்தின் ஓங்கார நாதம் கேட்க ஆரம்பிக்கும். இதைப் பிடித்துக்கொண்டு முன்னேறினால் இதன் மூலஸ்தானத்தைப் பிடித்து விடலாம். இதுவொரு நாத ரஸ மார்க்கம். யோக ரஸமார்க்கம் என்கிறார் ஸ்ரீ சங்கரர். அதையும்தான் பார்ப்போமே!

... வளரும்

ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ ப்ரேமிகவரதன் மருத்துவ முகாம், மதுரபுரி

ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் ட்ரஸ்ட், சென்னை சார்பில், ஸ்ரீ ப்ரேமிக வரதன் இலவச மருத்துவ முகாம், மதுரபுரியில், எப்ரல், மே மாத எல்லா ஞாயிற்றுக் கிழமைகளிலும் நடைபெற்றன.

30-4-2006 அன்று மதுரபுரி ஆஸ்ரம வளாகத்தில் டாக்டர் சபாபதி, இயற்கை மருத்துவ நிபுணர் மற்றும் அவரது குழுவினரால் இயற்கை மருத்துவ விழிப்புணர்வு சிறப்பு முகாம் நடத்தப்பட்டது.

உயிருள்ள இயற்கை உணவுகளின் மூலம் நோய்களை குணப்படுத்தும் வழிகளை மருத்துவர் விளக்கினார். நிகழ்ச்சிக்கு வந்திருந்த கிராம மக்களும், மிகவும் ஆர்வத்துடன் பல்வேறு நோய்களுக்கான சிகிச்சை முறையை மருத்துவரிடம் கேட்டுப் பயனடைந்தனர். நிகழ்ச்சியின் முடிவில் எல்லோருக்கும் இயற்கை உணவுகள் வழங்கப்பட்டன. டாக்டர் சபாபதி மற்றும் அவரது குழுவினருக்கு நமது அறக்கட்டளை சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**- Trustees**

# பாலகர்களுக்கு ஒரு கதை - 101

ஒரு ஊரில் ஒரு செல்வந்தர் இருந்தார். அவரிடம் ஏராளமான சொத்துக்கள் இருந்தன. அந்த சொத்துக்களை வைத்துக்கொண்டு அவர் அறவழியிலே வாழ்க்கையை நடத்தி வந்தார். கோவில் கட்டுவதற்குப் பணம் கொடுப்பார். ஏழைகளுடைய படிப்பிற்குப் பணம் கொடுப்பார். ஏழைகளுடைய திருமணத்திற்கு உதவி செய்வார். சாதுக்களுக்கு அன்னமிடுவார். பசியால் துன்பப்படுபவர்களுக்கு அன்னமிடுவார். நோயினால் அவதிப்படுபவர்களுக்கு உதவிசெய்வார். இப்படி சமூகத்தில் அல்லலுறும் மானிடர்களுக்கெல்லாம் உதவிசெய்து, ஆன்மீகம் தழைக்கவும் தன்னால் இயன்ற அளவு உதவி செய்து வந்தார்.

அவருக்கு அந்த ஊரிலே ஒரு குரு இருந்தார். தினமும் அந்த குருவைப் போய் சேவித்து வருவார். குருவும் அவருக்கு நல்ல தத்துவங்களை எல்லாம் உபதேசம் செய்வார். அவரது மனைவி, குழந்தையை ஈன்றெடுத்துவிட்டு இளம்வயதிலேயே இறைவனடியை அடைந்துவிட்டார். இப்படி இவரும், இவரது குழந்தையும் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களது வாழ்க்கை சுகமாக சென்று கொண்டிருந்தது. திடீரென்று அவர்களுக்கு ஒரு சோதனை. அவருக்கு கடுமையான ஒரு நோய் ஏற்பட்டது.

நோயை பரிசோதித்துவிட்டு மருத்துவர்கள், ‘‘நீ நீண்ட நாட்கள் உயிர் வாழமாட்டாய். ஒரு வருடமோ, இரண்டு வருடங்களோதான் உயிர் வாழ்வாய்’’ என்று கூறினார்கள். வாழ்க்கையில் இருந்த வரையில் நல்லது செய்தார். வசதியாக வாழ்ந்தார். ஒரு குருவை அடைந்தார். குரு மூலமாக நல்ல உபதேசங்களைப் பெற்றார். அவரது வாழ்வு நிறைவாக தான் அமைந்தது.

தனக்கு மரணம் ஏற்படப் போகின்றதே. இந்த உலகை விட்டுப் போகப் போகின்றோமே என்ற கவலை அவருக்கு இல்லை. ஆனால், தன்னுடைய குழந்தை சிறிய குழந்தையாக இருக்கின்றானே. அவனுக்கு இரண்டு மூன்று வயதுதான் இப்பொழுது ஆகியிருக்கின்றது. இந்தக்

குழந்தையை பிற்காலத்தில் நன்றாக வளர்ந்து, நன்றாக முன்னுக்கு வரவேண்டுமே என்ற எண்ணம் ஒன்றுதான் அவருக்கு இருந்தது.

அதே சமயத்தில், தன்னிடமிருக்கும் ஏராளமான சொத்துக்களையும் தன்னுடைய குழந்தைக்கு பத்திரமாக யாராவது பாதுகாத்துத் தரவேண்டும் என்றும் கவலைப்பட்டார். தன்னுடைய சொத்துக்களுக்கு எல்லாம் யாரை பொறுப்பாளராக நியமிக்கலாம் என்று யோசித்தார். உறவினர்களைப் பற்றி சிந்தித்துப் பார்த்தார். அவருக்கு அவர்கள்மேல் நம்பிக்கை வரவில்லை. தன்னுடைய நண்பர்களைப் பற்றி சிந்தித்துப் பார்த்தார். அவர்கள் மீதும் நம்பிக்கை வரவில்லை. அவரிடம் பொறுப்பை ஒப்படைக்கலாமா அல்லது இவரிடம் பொறுப்பை ஒப்படைக்கலாமா என்று பல பேரைப் பற்றிச் சிந்தித்து சிந்தித்து, ஓய்ந்துவிட்டார். ஒருவரும் தன்னுடைய சொத்துக்களை ஜாக்கிரதையாக பராமரித்து தன்னுடைய குழந்தையிடம் கொடுப்பார் என்ற நம்பிக்கை அப்பொழுது அவருக்கு இல்லை.

அவருக்கு ஒரு குரு இருக்கிறார் அல்லவா! அந்த குரு மீது அவருக்கு அபார நம்பிக்கை இருந்தது. அந்த குருநாதரைப் பார்த்து, ''ஸ்வாமீ! எனக்கு ஒரு நோய் வந்திருக்கின்றது. மருத்துவர்கள் நான் ஓரிரு வருடங்கள் தான் உயிருடன் வாழ்வேன் என்று கூறுகின்றார்கள். என்னுடைய குழந்தைக்கு வயது இரண்டரை வருடங்கள் தான் ஆகின்றது. அவனைப் படிக்க வைத்து, நன்றாக வளர்த்து, அவனை எல்லாவிதத்திலும் முன்னேறச் செய்து, அவனுக்கு நல்ல நிலைக் கொடுத்து தகுந்த பக்குவமும், வயதும் வந்த பிறகு என்னுடைய சொத்துக்களையெல்லாம் ஜாக்கிரதையாக ஒருவர் ஒப்படைக்க வேண்டும். அதற்கான நபரைத் தேடிப் பார்த்தேன். ஒருவரிடமும் எனக்கு நம்பிக்கை வரவில்லை. உங்களிடம்தான் நம்பிக்கை இருக்கின்றது. நீங்கள் தயவுசெய்து என்னுடைய சொத்துக்களையும் குழந்தையை வளர்க்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு, அவனை நல்ல கல்விமானாக்கி, தகுந்த வயதும், பக்குவமும் வரும்போது, என்னுடைய சொத்துக்களையெல்லாம் அவனிடம் நீங்கள் ஒப்படைக்க வேண்டும் என்று வேண்டினார்.

குரு அவரிடம், நீ சொல்வதில் நியாயம் இருக்கிறது. தவறொன்றுமில்லை. ஆனால், நானோ துறவி. துறவியாக இருக்கக்

கூடிய நான் உலக மக்களின் வாழ்க்கையில் நடக்கும் விஷயங்களில் ஈடுபடுவது என்பது தகாது. எனக்கு எதற்கு சொத்து. நான் எப்படி அதை வாங்கி வைத்துக்கொண்டு உன்னுடைய குழந்தைக்குக் கொடுக்க முடியும். நான் ஜபம் செய்ய வேண்டும், தியானம் செய்ய வேண்டும். இறைவனுக்கு ஆற்றவேண்டிய பணிகளே அதிகம் இருக்கின்றன. உன்னுடைய சொத்துக்களையெல்லாம் நான் வாங்கி வைத்துக்கொண்டால் மட்டும் போதாது. அவற்றை செவ்வனே பராமரிக்க வேண்டும் அல்லவா! அதற்கான ஆற்றலும் எனக்கில்லை. அதற்கான நேரமும் எனக்கில்லை. உனக்கு ஏதாவது நன்மை செய்யவேண்டும் என்ற எண்ணம் இருக்கின்றதே தவிர, ஆனால் அதை என்னால் செய்ய முடியாதவனாக நான் இருக்கின்றேன்'' என்று அநத குருவானவர் பதில் அளித்தார்.

இவரோ தன் குருவை விடுவதாக இல்லை. மிகவும் வருத்தப்படும் அந்த செல்வந்தரைப் பார்த்து குருவானவர் சொன்னார். ''இந்த ஊரிலே உனக்கு யார் மீதேனும் சிறிதளவாவது நம்பிக்கை இருக்கின்றதா?'' என்று கேட்டார். அதற்கு அவர் ஒருவர் பெயரைச் சொல்லி, ''அவர் நல்லவர், நல்ல பண்பாளர், நல்ல குடும்பத்திலே பிறந்தவர். அவரிடம் ஏராளமான சொத்துக்கள் இருக்கின்றன. ஆகவே, அவர் என்னுடைய சொத்துக்களுக்கு ஆசைபடவேண்டிய அவசியமில்லை. எனக்கு கொஞ்சம் நம்பிக்கை வருகின்றது என்று சொன்னால் அவர் மீது என்று சொல்லலாம்'' என்றார்.

உடனே அந்த குருநாதர், ''உன்னுடைய சொத்துக்களை எல்லாம் அவரிடம் ஒப்படைத்து விடுவதாக ஒரு உயில் எழுதி, உன்னுடைய குழந்தையை வளர்க்கும் பொறுப்பையும் அவரிடம் ஒப்படைத்து விடு. அவ்வாறு செய்துவிட்டு, அந்த உயிலிலே, இந்த சொத்துக்களை எல்லாம் பிற்காலத்தில் அவனிடம் ஒப்படைக்கவேண்டும் என்று எழுதாதே! இஷ்டப்பட்டதை அவனுக்குக் கொடுக்கலாம் என்று எழுது, அவர் என்ன இஷ்டப்படுகின்றாரோ அதை அவர் பிற்காலத்தில் உன் மகனுக்கு ஒப்படைத்தால் போதும் என்று எழுது'' என்றார். குருநாதர் சொல்கின்றார் என்றால் அதில் ஆழ்ந்த பொருளிருக்கும் என்று நினைத்து, அவர் அப்படியே ஒரு உயில் எழுதினார்.

அந்த உயிலிலே, ''என்னுடைய சொத்துக்களையெல்லாம், அந்த பெரியவரிடம் ஒப்படைக்கின்றேன். என்னுடைய குழந்தையை வளர்க்க வேண்டியது அவரது பொறுப்பு. அவனை வளர்த்து, கல்விமானாக்கி தக்க வயதில் அவர் விருப்பப்படுவதை அவனிடம் ஒப்படைக்கலாம்'' என்று உயில் எழுதினான். அதில் எல்லோரும் சாக்ஷி கையெழுத்துப் போட்டார்கள். சிறிது காலத்தில், மருத்துவர்கள் சொன்னபடி அந்த தனவந்தர் இறைவனடியை அடைந்துவிட்டார்.

குழந்தையை அந்த ஊர் பெரியவர் எடுத்து வளர்த்தார். அவன் நல்ல அறிவாளனாக மாறினான். கல்விமானாகத் திகழ்ந்தான். அவனுக்கு தக்கப் பருவம் வந்தது.

மனிதனுடைய மனம் என்பது எப்பொழுதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை அல்லவா? அந்த பண்பாளரிடம் ஏற்கனவே நிறைய சொத்துக்கள் இருந்தும்கூட, இந்த சொத்துக்கள் மீதும் ஆசை வந்துவிட்டது. அவரது குணங்கள் மாறிவிட்டன. எப்படியாவது இந்த சொத்துக்களையும் தான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்தார்.

ஒரு நாள் அந்த பையன் அவரிடம், ''என் தகப்பனார் கொடுத்த சொத்துக்களையெல்லாம் என்னிடம் கொடுங்கள். என்னால் அவற்றை பராமரிக்க முடியும்'' என்று கேட்டான். அதற்கு அந்த தனவந்தர், ''உனது தகப்பனார் என்ன உயில் எழுதியிருக்கிறார் என்று பார். நான் எதை இஷ்டப்படுகின்றேனோ அதை உனக்குக் கொடுத்தால் போதும் என்று தானே எழுதியிருக்கின்றார். நீ இப்பொழுது வசிக்கின்றாயே இந்த சிறிய வீடு, அந்த வீடு மட்டும் தான் உனக்கு சொந்தம். உன்னைப் படிக்க வைக்க ஆகியிருக்கும் செலவு இருக்கிறதே. அதை நான் செலவழித்ததாக வைத்துக்கொள். இதைத் தவிர வேறு எதையும் உனக்குத் தருவதாக இல்லை. மீதியெல்லாம் எனக்குத்தான் சொந்தம். அந்த உயில்படி நான் சொல்வது நியாயமானது தான். ஒன்றும் ஏமாற்று வேலை இல்லை. இதில் எல்லோரும் சாக்ஷி கையெழுத்து போட்டியிருக்கின்றார்கள். இந்த வீட்டை மட்டும்தான் உனக்குத் தருவதற்கு நான் இஷ்டப்படுகின்றேன்'' என்று கூறிவிட்டார்.

இந்தப் பையன் பார்த்தான். ‘‘நம்முடைய தகப்பனார் பெரிய செல்வந்தராக இருந்தும் அவரது சொத்துக்கள் எல்லாம் நம்மை சாராமல் போய்விட்டதே!’’ என்று மிகவும் வருந்தினான்.

‘‘நம்மிடம் அந்த சொத்துக்கள் வந்தால்தானே, நம்முடைய தகப்பனார் செய்து வந்ததுபோல் அநேக தர்மங்களைச் செய்யலாம். ஏழைகளுக்கும் நோயினால் அவதிப்படுவர்களுக்கும் பசியால் வாடுபவர்களுக்கும் உதவி செய்யலாம். மேலும் அவன், தர்மம் செய்யவேண்டும் என்ற ஆசையின் பொருட்டு அந்த சொத்துக்களை எப்படியாவது மீட்கவேண்டும் என்று நினைத்தான்.

அவன் அந்த ஊரிலே இருக்கக்கூடிய மன்னவனிடம் தன்னுடைய குறைகளை எடுத்துச் சொன்னான். மன்னவன், அந்த உயிலை வாங்கிப் படித்துப் பார்த்தான். அதில், ‘‘உனக்கு இஷ்டப்பட்டதை அவனிடம் கொடு என்ற வார்த்தையை கவனித்தான். அதுவும் ஒரு மஹாத்மா, குரு சொல்லி அந்தப் பையனின் தகப்பனார் எழுதியது தெரிய வந்தது. அதில் ஆழ்ந்த பொருள் இருப்பதை உணர்ந்தான். உடனே, அந்த தனவந்தரிடம், ‘‘இந்த உயிலில் என்ன எழுதியிருக்கின்றது தெரியுமா? உனக்கு இஷ்டப்பட்டதை அந்த பையனிடம் கொடு என்று இருக்கின்றது. உனக்கு இஷ்டப்பட்டதையெல்லாம் நீ வைத்துக்கொண்டியிருக்கிறாயே. வீடு மட்டும் தானே அவனுக்குக் கொடுத்தாய். அதை மாற்றி, வீடு மட்டும் தான் உனக்கு வைத்துக் கொண்டு மற்ற சொத்துக்களை எல்லாம் அவனிடம் கொடு. உனக்கு இஷ்டப்பட்டதை அதாவது, நீ எதையெல்லாம் விரும்புகின்றாயோ, நீ எதையெல்லாம் வைத்துக் கொள்ள ஆசைப்படுகின்றாயோ அதையெல்லாம் அவனுக்குக் கொடு என்று பொருள். ஆகவே, அந்த வீட்டை மட்டும் வைத்துக் கொண்டு மற்றதை அவனிடம் கொடுத்துவிடு என்று தீர்ப்புக் கூறினார்.

அந்த மஹாத்மா எவ்வளவு தீர்க்கதரிசியாகி, மனிதர்களுடைய குணங்களையும் எண்ணங்களையும் அதன் போக்கையும் அறிந்து இப்படி ஒரு உயில் எழுத சொன்னார் பாருங்கள்.

# ஸ்ரீ ருக்மிணியின் ப்ரார்த்தனை (ஸ்ரீ ருக்மிணி கீதம்)

ஸ்ரீமத்பாகவதத்தில், ஸ்ரீருக்மிணீ, த்வாரகாதீசனான கண்ணனுக்கு, ஏழு ச்லோகங்களில் தன்னை விவாஹம் செய்து கொள்ளும்படி ப்ரார்த்தித்து, ஓர் ஓலையை அனுப்புகிறாள். ஆறு, எட்டு என்று இல்லாமல், சரியாக இரத்தினம் போன்று ஏழே ச்லோகங்களை எழுதியதற்கு, பல சுவாரஸ்யங்களை யூகிக்க முடியும். 'அவை என்ன?' என்று பார்ப்போம்.

- விவாஹத்தில், ''ஸப்தபதி'' என்னும் ஒரு முக்கியமான சடங்கு உண்டு. அதில் மணமக்கள், ஏழு அடிகள் சேர்ந்து வைப்பதால், ஜன்மம் முழுவதும் அவர்களுக்குள் இணைபிரியாத பந்தம் ஏற்படுகின்றது என்பதே தாத்பர்யம். இதை மனதில்படும் வகையிலே ஏழு ச்லோகங்கள் எழுதினாள்போலும்!
- இதற்குமுன் மத்ஸ்ய, கூர்ம, வராஹ, நரஸிம்ஹ, வாமன, பரசுராம, ராம என்ற ஏழு அவதாரங்களையும் எடுத்தது நீயே என்று காண்பிக்கிறாள் போலும்.
- இன்றும் சப்தரிஷி மண்டலத்தில், ஏழு ரிஷிகளும், எப்பொழுதும் உனது புகழையே பாடிக்கொண்டு இருக்கிறார்களன்றோ! என்று போற்றுகிறாள் போலும்.
- 'ஸப்த லோகங்கள், ஸப்த த்வீபங்கள், ஸப்த சமுத்ரங்களைக் கொண்ட இந்தப் ப்ரபஞ்சத்திற்கு ஸ்வாமியான நீர் எனக்கும் ஸ்வாமி அன்றோ' என்று நினைவூட்டுகிறாள் போலும்.
- 'இற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உந்தன்னோடு உற்றோமே ஆவோம் உமக்கே நாம் ஆட்செய்வோம்' - என்று ஆண்டாள் கூறியதுபோல், ஏழேழு ஜன்மங்களுக்கும் நான் உன்னுடனேயே சேர்ந்து இருக்க வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறாள் போலும்
- சரணாகதித் தத்துவத்தைக் குறிக்கும் இந்த என்னுடைய தூதை, ருக்மிணி-கீதமாக எல்லாரும் பிற்காலத்தில் பாடுவார்கள் என்று நினைத்து, ஏழு ஸ்வரங்களைக் குறிக்கும் வகையில் ஏழு ச்லோகங்கள் எழுதினாள் போலும்.
- யஜுர் வேதத்தில், ஏழு காண்டங்களால் போற்றப்படும் வேத புருஷன் நீரே என்று பறை சாற்றுகிறாள் போலும்.

- ❋ சூரிய மண்டலத்தின் மத்தியில் வீற்றிருக்கும் சூரிய நாராயணன் நீரே! அந்தச் சூரியனின் கிரணங்களில் மிளிரும் ஏழு வர்ணங்களைப் போல், என்னுடைய ஏழு ச்லோகங்கள் கொண்ட இந்தப் ப்ரார்த்தனையும் ப்ரகாசிக்கும் என்று **பா**வித்தாள் போலும்.
- ❋ எந்த ஒரு தெய்வீகமான காரியம் சித்தியடைவதற்கும் ஏழு நாட்கள் என்பது ஒரு காலம். பாகவத ஸப்தாஹம் என்றும், यं सप्तरात्रं प्रपठन् என்று நாரதர் துருவனிடம் - ‘ஏழு நாட்கள் இந்த மந்த்ரத்தை ஜபம் செய்தால் ஸித்தியடைய முடியும்’ - என்றும் கூறுவது இந்த அடிப்படையில்தான். அதேபோல், ‘ஏழு நாட்கள் கோவர்த்தனத்தைத் தூக்கி, நீ ப்ருந்தாவனவாஸிகளின் துயரத்தைத் தீர்த்தாயன்றோ? அதேபோல், ஏழு ச்லோகங்களில் உன்னைத் துதிக்கும் என்னுடைய மனோரதம் சித்தியடையும் வகையில், என் துயரத்தைத் தீர்க்கக் கடவாய் என்கிறாள்’’ போலும்.
- ❋ சீதை, த்ரௌபதி, தாரா.... போன்ற ஏழு பதிவ்ரதைகளைப் போல், நானும் உன்னைப் பதியாகக்கொண்டு, அனன்யமாகப் பஜிக்க வேண்டும் என்று நினைத்து, ஏழு ச்லோகங்களால் அவர்களை ஸ்மரித்து, தனது மனோரதம் நிறைவேறுமாறு ப்ரார்த்திக்கின்றாள் போலும்.
- ❋ இந்தக் கீதத்தின் ஒவ்வொரு ச்லோகமும், கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, சிந்து, நர்மதா, காவேரி என்னும் ஸப்த புண்ய நதிகளுக்குச் சமமாக, படிப்பவர்களைப் பாவனமாக்கும் என்று பொருள்படும்படி எழுதுகிறாள் போலும்.
- ❋ அயோத்யா, மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்திகா, த்வாரகா என்கின்ற ஏழு மோக்ஷபுரிகளை நினைவில் கொண்டு, ஏழு ச்லோகங்கள் எழுதி, நீ என்னை உன்னிடம் சேர்த்துக்கொண்டு, இந்த ஸம்ஸாரத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்று ப்ரார்த்திக்கின்றாள் போலும்.
- ❋ உபய காவேரி மத்தியில், ஸப்த ப்ரகாரங்களுக்குள் வீற்றிருக்கும் சாக்ஷாத் வைகுண்டபதியான ஸ்ரீரங்கநாதர் நீரே என்று நான் அறிந்துகொண்டேன் என்பதைத் தெரிவிக்கவே, ஏழு ச்லோகங்கள் எழுதினாள் போலும்.

இதுபோல், பல ஸ்வாரஸ்யங்களைத் தெரிவிக்கும் ரீதியில் அமைந்துள்ள ஸ்ரீ ருக்மிணீதேவியின் இந்த ஏழு ச்லோகங்கள் கொண்ட ப்ரார்த்தனையானது, மிகவும் அற்புதமானது. அதை அனுபவிப்பது நமது பாக்யமே!

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து-126

*நகைக்கிடமிலை எனை நாடிய நின் அருள்*
*நகையிட்டுப் பார் நீ அருணாசலா*

இந்த பாடலுக்கு நாயகா, நாயகி **பா**வத்தில் ஸ்தூலமாக அர்த்தம் பார்த்தோம் எனில், ''கல்யாணமாகிற ஒரு பெண்ணிற்குத் தேவையான சீர்வரிசைகளைப் பலவகையில் செய்யும் வசதி என்னிடம் இல்லை. ஆகையால், ''அருணாசலா! எனக்கு நீயே உனது 'அருள்' எனும் நகையை போடு'' என்பது போல் வருகிறது. இதை மற்றொரு விதமாகவும் பார்க்கலாம்.

சூக்குமமாய் இந்த பாடலில், ''அருணாசலா! உன்னை நாடிய எனக்கு தகுதி எதுவும் இல்லை'' என்று எனைப் பார்த்து பரிகாசம், (ஏளனம்) செய்யக்கூடிய தருணம் இல்லை இது. நீ எனைப் பார்த்து ஒரு மந்தஹாஸமான புன்னகையைச் (அருள் நகை) செய்து என்னை தூக்கி விட வேண்டும் என்று பொருள்படுகிறது.

ஆன்ம சாக்ஷாத்காரம் அடைவதற்கு தகுந்த நேரமும், காலமும் அவசியம் என்பர். இது தவறு. மேலும், பாமரர்கள் ஆன்ம சாக்ஷாத்காரம் அடையார் என்பர். இதுவும் தவறே. சரித்திரத்தைப் பார்த்தால், பாமரர்கள் எளியர் ஆன்ம லாபத்தைப் பெற்றுள்ளனர் என்று பல பிரமாணங்களைச் சொல்லலாம். தகுந்த நேரமும், காலமும் அவசியம் இல்லை என்பதையும் நிரூபிக்க முடியும்.

கட்வாங்கர் எனும் மஹாராஜா ஒருவர் இருந்தார். இவரிடம் பெரியதான ஒரு சைன்யம் இருந்தது. மேலும், யுத்தத்தில் அவர் மிகவும் சமர்த்தர். தேவலோகத்தில் அசுரர்களுக்கும், தேவர்களுக்கும் கடுமையான சண்டை நடக்கும். தேவர்கள், சண்டை நடக்கும் பொழுது எல்லாம் யுத்தத்தில் சமர்த்தரான கட்வாங்க மஹாராஜாவை துணைகொண்டு வெற்றிப் பெறுவார்கள். இப்படிப் பலமுறை கட்வாங்கர் தேவர்களின் அழைப்பை ஏற்று சைன்யத்துடன் சென்று தேவர்களுக்கு வெற்றிப் பெற்றுக் கொடுத்துள்ளார். கட்வாங்கர்

இப்படி வெற்றிப் பெற்றுக் கொடுத்ததால், தேவர்கள் அவரிடம், ''பலமுறை எங்களுக்கு உதவி புரிந்து வெற்றிப் பெற்றுக் கொடுத்து உள்ளீர்கள். தங்களுக்கு நாங்கள் ஏதாவது பிரதி உபகாரம் செய்ய எண்ணுகிறோம். என்ன வேண்டுமோ, கேளுங்கள்'' என்றனர்.

கட்வாங்கரும், ''எனக்கு இன்னும் எவ்வளவு நாள் ஆயுள்காலம் உள்ளது என்பதைப் பார்த்துச் சொல்லுங்கள். அது போதும்'' என்றார். தேவர்களும் அவரிடம், ''இன்னும் ஒரு முகூர்த்த காலமே (அரை மணிக்கும் குறைவான நேரம்) தங்களுக்கு ஆயுள் பாக்கி உள்ளது'' என்றனர். கட்வாங்கரோ அதைக் கேட்டுக் கலங்காது, அந்த ஒரு முகூர்த்த காலத்திலேயே, முயற்சித்து ஆன்ம அனுபவம் பெற்றார். ஆக, நேரமும், காலமும் ஒரு தடை அல்ல என்பது தெளிவாகிறது.

யாரால் ஆன்ம அனுபவம் பெற முடியாது எனில் யாருக்கு ஸ்திரமான புத்தி இல்லையோ, அவரே ஆன்ம அனுபவம் பெற மாட்டார். சஞ்சலமான புத்தி உள்ளவர், எந்த ஒரு சாதனையையும் தொடர்ந்து விடாது செய்யமாட்டார். ஓரிடத்தில், பிரணவ ஜபத்தினால் மட்டுமே முக்தி அடையலாம் எனில், அதைப் பத்து நாட்கள் தீவிரமாய் முயற்சிப்பார். பின்னர், அதில் முன்னேற்றம் தெரியவில்லை எனில், அதை விட்டுவிடுவார். பொறுமையின்மையும், ஸ்திரமான புத்தி இல்லாததும்தான் இதற்கு காரணம். இப்படி உள்ளோர் சிறிது காலம் தியானம் செய்வர். பின்னர் அதை விட்டுவிட்டு, யோகம் செய்வர். பின்னர் அதையும் விட்டு விட்டு, எங்காவது விசாரம் செய்வது பலன் தரும் என்றால் அதை முயற்சிப்பர். எல்லாவற்றையும் விட்டு விட்டு சமயத்தில் யாகம், யக்ஞம், ஹோமம் என்று கிளம்பி விடுவர். இப்படி ஒன்றிலும் பிடிப்பு இல்லை எனில் முன்னேற்றம் எப்படி வரும்?

இப்படி சஞ்சல புத்தி உள்ளோருக்கு, ஆன்மீகத்தில் முன்னேற்றம் எதுவும் இல்லை என்றாலும், பக்தி கதைகளையும், வேதாந்த கருத்துக்களையும் கேட்டு விட்டு, சிறிது, ஜப, தியானம் செய்து வரும் வேளையில் தங்களுக்கு பக்தி, ஞான, வைராக்யங்கள் இருப்பதாக எண்ணிக்கொள்வர். உண்மையில் அது பொய்யாக இருக்கும். இவர்கள் ஒரு நாத்திகவாதியிடம் எதிருச்சையாக பழகி அவரிடம் அவர் கொள்கை பற்றி கேட்க நேர்ந்தால் இவரும்,

''எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. கடவுள் என்று ஒருவர் உள்ளாரா என்று ஐயமாக இருக்கிறது. நானும் பலபேரைக் கேட்டு விட்டேன். யாருக்கும் பதில் சொல்லத் தெரியவில்லை. நான் முயற்சித்தும், எனக்கும் விடை கிடைக்கவில்லை'' என்பர். அது மட்டுமின்றி தனிமையில், ''நாம் ஏதோ கடவுள் இருக்கிறார்'' என எண்ணி கற்பனை செய்துகொள்கிறோமோ எனவும் எண்ணுவர். இவர்களுடைய உறவினர்களுக்கோ, ஸ்நேகிதர்களுக்கோ கடுமையான துன்பமோ, வியாதியோ வந்துவிட்டால், கடவுளுக்குக் கருணையே இல்லை என்பர். அகில உலகமும் படைத்து, ரக்ஷித்து வரும் இறைவனுக்கு யாதொரு கருணையும் இல்லை என்று சொல்ல இவருக்கு கூசவும் செய்யாது. ஆயின், மிகவும் சுயநலபுத்தி கொண்ட அல்பனான தனக்கு மட்டும் கருணை பொங்கி வழிவதாக நினைத்துக்கொள்வர். இது, ஸஞ்சல புத்தி கொண்டோரின் ஸ்வ**பா**வமாக இருக்கும். இதைவிட ஒரு பெரிய அகங்காரம் இருக்கவும் முடியாது.

நமது இந்து மதத்தில் பலவிதமான மார்க்கங்கள் இருப்பதனால் அதைக் குறை கூற முடியாது. உண்மையில் இது ஒரு பெரிய பெருமை. காரணம் இத்தனை வேறுபட்ட மார்க்கங்களில் சென்று உயர்ந்த அனுபவத்தைப் பெற்ற மஹான்கள் அனைவரும் தம்தம் மார்க்கத்தில் எவ்வளவு பெரிய நிஷ்டையுடன் இருந்துள்ளனர் என்பதே இதற்குச் சான்று. எல்லா மார்க்கமும் சரியே என்று சொல்லி, ஒரு மார்க்கத்திலும் தொடர்ந்து திடவிசுவாசமுடன் கடைபிடிக்காதவருக்கு அனுபவம் என்பது ஏற்பட வழி இல்லை.

**(தொடரும்)**

*Copyright of articles published in*
*'**MADHURAMURALI**' is reserved.*
*Reproduction of any article from*
*'**MADHURAMURALI**'*
*requires written consent from the Publisher.*

# செய்திகள்

### ஏப்ரல் 30-ஆம் தேதி — அக்ஷய த்ருதீயை

சென்னை, ஆலப்பாக்கத்தில், நமது சாந்தீபனி குருகுல ட்ரஸ்ட் சார்பில், ஸ்ரீ ஸாந்தீபனீ வேதாந்த சாஸ்த்ர பாடசாலையை ஸ்ரீ ஸ்வாமிஜி துவக்கி வைத்தார்கள். இதற்கு அத்யாபகராக ப்ரஹ்மஸ்ரீ மல்லிகார்ஜுன ஸோமயாஜி பொறுப்பேற்றுள்ளார்கள். தொடக்க விழாவில், ப்ரஹ்மஸ்ரீ V. ஸ்வாமிநாத ஆத்ரேயர் கலந்து கொண்டார்கள்.

### மே 3-ஆம் தேதி, 4-ஆம் தேதி

குடியாத்தம் வேதாந்த பாடசாலையில் நடைபெற்ற 71-வது ஆதிசங்கரர் ஜெயந்தி விழாவில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டு அருளுரை ஆற்றினார்கள்.

### மே 9-ஆம் தேதி, 23-ஆம் தேதி

ஏகாதசியை முன்னிட்டு மஹாரண்யம் மதுரபுரியில், மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி திருமஞ்சனம், ஆராதனை நிகழ்த்தினார்கள்.

### மே 25-ஆம் தேதி முதல் 31 ஆம் தேதி வரை

மதுரை, தல்லாகுளம், கோகலே ரோடு, லட்சுமிசுந்தரம் ஹாலில் தினமும் மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் அருளுரை வழங்கினார்கள். மே 30, 31 தேதிகளில் நடைபெற்ற ஸ்ரீ ராதாமாதவ கல்யாண மஹோத்ஸவத்திலும் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்து கொண்டார்கள். மதுரை திரு. வாசுதேவன், ஸ்ரீ S.K. கலியன் இராமானுஜதாஸன், T. செல்வகுமார் முதலியோர் ஏற்பாடுகளை மிகச்சிறப்பாக செய்திருந்தனர்.

### ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகளின் விபரம்

| | |
|---|---|
| 07-06-2006 | ஏகாதசி — இடம் : மதுரபுரி, மஹாரண்யம் கிராமம். |
| 22-06-2006 | ஏகாதசி — இடம் : மதுரபுரி, மஹாரண்யம் கிராமம். |
| 01-07-2006 முதல்<br>09-07-2006 வரை<br>மாலை 6.30 மணி முதல்<br>இரவு 8.30 மணி வரை | உபன்யாசம்<br>இடம் : ஸ்ரீமத் அபிநவ வித்யாதீர்த்த ப்ரவசன மண்டபம்,<br>ஸ்ரீ கோதண்டராமஸ்வாமி தேவஸ்தானம்<br>ராமர் கோவில், ராம்நகர், கோயமுத்தூர் - 641 009 |

# Other Satsang Programmes

Sri Hari :

**Nāma Vaibhavam Anirvachaniyam**

***Music & Dance Programme***

with Nāma Sarkirtan as the theme

*Performance by*

**Mridangam a mile thro'**
**Guru Karaikudi R. Mani,**
**Sri O.S. Arun &**
**Nruthya Choodamani, Smt. Rajeswari Sainath**
*at*
**Ravindra Bharathi**, Hyderabad
*on*
**the 13th June 2006.**

## SATSANG

| | | |
|---|---|---|
| Place | : | Asthika Samajam, Malleswaram Bangalore |
| Date | : | 16.06.06 to 22.06.06 |
| Time | : | 6.30 - 8.00 p.m. |
| Talk in English by | : | Sri. M.K. Ramanujam |
| Topic | : | Upadesa Saram |
| Contact Person | : | Bangalore Sri. Chandrasekaran |
| Contact No. | : | 94484 83600 |

மங்களானிபவந்து